இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

2006 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, ஊடக ஆளணியினருக்கான சமூகப் பாதுகாப்பு நலனோம்பல் திட்டச் சட்டம்

(2006 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 05 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

2006, செத்தெம்பர் மாதம் 08 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

விலை : ரூபா 15.25 **தபாற் செலவு : ரூபா 7.50**

2006 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, ஊடக ஆளணியினருக்கான சமூகப் பாதுகாப்பு நலனோம்பல் திட்டச் சட்டம்

[2006 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 05 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச.வ.ஓ. 61/2005

ஊடக ஆளணியினருக்கான சமூகப் பாதுகாப்பு நலனோம்பல் திட்டமொன்றைத் தாபிப்பதற்கும் பேணுவதற்கும் சமூகப் பாதுகாப்புச் சபையால் சமூகப் பாதுகாப்பு நலனோம்பல் திட்டத்தின் தொழிற்பாட்டிற்கும் கட்டுப்பாட்டிற்கும் ஏற்பாடு செய்வதற்கும் அத்துடன் அவற்றோடு தொடர்புடைய அல்லது அவற்றின் இடைநேர் விளைவான [illegible] ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

1. (1) 2006 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, இச்சட்டம் ஊடக ஆளணியினருக்கான சமூகப் பாதுகாப்பு நலனோம்பல் திட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் இச்சட்டம் பாராளுமன்றச் சட்டமொன்றாக அத்தாட்சிப்படுத்தப்படும் தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும் என்பதுடன் ஏனைய ஏற்பாடுகள் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையின் மூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும். (இது இதனகத்துப்பின்னர் ''நியமிக்கப்பட்ட தேதி'' எனக் குறிப்பீடு செயயப்படும்).

பாகம் I

ஊடக ஆளணியினருக்கான நலனோம்பல் திட்டம் ஒன்றைத் தாபித்தல்

ஊடக ஆளணியினருக்கான நலனோம்பல் செயற்றிட்டம் ஒன்றைத் தாபித்தல்.

2. ஊடக ஆளணியினருக்கான சமூகப் பாதுகாப்பு நலனோம்பல் திட்டம் என அழைக்கப்படவேண்டிய திட்டமொன்று இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க தாபிக்கப்படுதல் வேண்டும். (இது இதனகத்துப் பின்னர் ''நலனோம்பல் செயற்திட்டம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்).

2–PL 001292 – 1,300 (2006/07)

நலனோம்பல் செயற்திட்டத்தின் குறிக்கோள்.

3. நலனோம்பல் செயற்திட்டத்தின் குறிக்கோளாவது, ஊடக ஒழுங்கமைப்புகளில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள ஊடக ஆளணியினருக்கு சமூகப் பாதுகாப்பு நலன்கள் என்ற வகையில் நலன்களை வழங்குவதாதல் வேண்டும்.

நலனோம்பல் செயற்திட்டத்தில் இணைவதற்கான தகுதி.

4. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தைந்தாம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ஊழியர் சேமலாப நிதிய (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியன்று —

(அ) ஊடக ஒழுங்கமைப்பொன்றில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள ஊடகவியலாளர் ஒருவராகவும் ; அத்துடன்

(i) அத்தகைய ஒழுங்கமைப்பில் அத்தகைய தொழிலில் உறுதிப்படுத்தப்பட்ட ஊடகவியலாளர் ஒருவராகவும் ; அல்லது

(ii) அத்தகைய ஒழுங்கமைப்பில் ஒப்பந்த அடிப்படையில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ளவராகவும் ; அல்லது

(iii) அத்தகைய ஒழுங்கமைப்பால் தொழிலுக்கமர்த்தப்பட்ட சுயேச்சை ஊடக ஆளணியினர் ஒருவராகவும்.

(ஆ) பதினெட்டு வயதுக்குக் குறையாதவராகவும் ஐம்பது வயதுக்கு மேற்படாதவராகவும் ; அத்துடன்

(இ) 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு, விடயத்துக்கேற்ப, உதவு தொகை செலுத்துநர் ஒருவராகவும் அல்லது செலுத்தாத ஒருவராகவும்,

உள்ள ஆளெவரும் தன்னிச்சையின் அடிப்படையில் நலனோம்பல் செயற்திட்டத்தில் இணைவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும் இச்சட்டம் தொடங்கும் தேதியன்று ஐம்பது வயதுக்குக் குறையாதவரும் ஐம்பத்தைந்து வயதுக்கு மேற்படாதவருமான எவரேனும் ஊடக ஆளணியினரும், அத்தகைய ஆள் இப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் தேவைப்பாடுகளை நிறைவேற்றியிருக்கவில்லை என்ற நிகழ்வு எவ்வாறிருப்பினும் நலனோம்பல் செயற்திட்டத்தில் இணைவதற்கு உரித்துடையவராதல் வேண்டும் :

ஆயின், மேலும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் ஓய்வூதிய செயற்திட்டத்தில் உறுப்பினரொருவராக அல்லது அதற்கு உதவுதொகை செலுத்துநர் ஒருவராகவிருக்கும் ஊடகவியலாளர் எவரும் இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட நலனோம்பல் திட்டத்தில் இணைவதற்கு உரித்துடையவராதலாகாது.

நலனோம்பல் திட்டத்தின் கீழான நலன்கள்.

5. (1) (இதனகத்துப்பின்னர் "உதவுதொகை செலுத்துநர்" எனக் குறிப்பீடு செய்யப்படுபவரான) நலனோம்பல் செயற்திட்டத்தில் இணைகின்ற ஊடகவியலாளர் ஒருவர், விதித்துரைக்கப்பட்ட முறையில் கணிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தொகைகளில் காலாகாலத்திலான நலன்களுக்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(2) செலுத்தப்படற்பாலதான நலனின் தொகையைக் கணிப்பிட வேண்டிய அடிப்படையை விதித்துரைக்கையில் உதவுதொகைகள், செய்யப்பட்ட காலப்பகுதி, உதவுதொகை செலுத்துநரின் வயது மற்றும் உதவுதொகை செலுத்துநரினால் செய்யப்பட்ட மொத்த உதவுதொகை என்பன கருத்திற்கொள்ளப்படுதல் வேண்டும்.

நலன்கள் எப்போது செலுத்தப் படற்பாலது என்பது.

6. (1) உதவுதொகை செலுத்துநர் ஒருவர் அறுபது வயதை அடைவதன்மீது 5 பிரிவின்கீழ் தரப்பட்டுள்ள முறையில் கணிக்கப்பட்டவாறு செயற்றிட்டத்தின்கீழ் நலன்களின் விதித்துரைக்கப்பட்ட தொகையொன்றை மாதாந்த தவணைக்கொடுப்பனவுகளில் பெறுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும் என்பதுடன் உதவுதொகை செலுத்துநர் இறக்கும் மாதத்தின் இறுதிவரை அத்தகைய மாதாந்த நலன்களைத் தொடர்ந்து பெறுதலும் வேண்டும்.

(2) நலனோம்பல் செயற்திட்டத்தின்கீழ் மாதாந்த நலன்களைப் பெறத் தொடங்கியுள்ள உதவுதொகை செலுத்துநர் ஒருவர் எண்பது வயதை அடையுமுன்னர் இறக்கும் பட்சத்தில் —

(அ) உயிர்பிழைத்திருக்கும் வாழ்க்கைத்துணை ஒருவர் இருக்குமிடத்து –

(i) அத்தகைய வாழ்க்கைத்துணை வேறு ஏதேனும் ஒய்வூதியத் திட்டத்துக்கு அல்லது நலனோம்பல் செயற்திட்டத்திற்கு பயனாளி அல்லது உதவு தொகை செலுத்துநர் ஒருவராக அல்லாவிடில் காலஞ்சென்ற உதவுதொகை செலுத்துநர் எண்பது வயதை அடையும்வரை உயிரோடிருந்தால் அவர் பெற்றிருக்கக்கூடிய அதே முறையில் மாதாந்த நலன்களைப் பெறுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(ii) அத்தகைய வாழ்க்கைத்துணை வேறு ஏதேனும் ஒய்வூதியத் திட்டத்திற்கு அல்லது நலனோம்பல் திட்டத்திற்கு பயனாளி அல்லது உதவுதொகை செலுத்துநர் ஒருவராக இருப்பின் காலஞ்சென்ற உதவுதொகை செலுத்துநரால் செலுத்தப்பட்ட உதவுதொகைகளின் மொத்தத் தொகையிலிருந்து செலுத்தப்படாது எஞ்சியுள்ளவாறான அத்தகைய உதவுதொகைகளின் தொகையை அதன்மீது இயைபான நேரத்தில் நிலவுகின்ற வங்கி வீதங்களைக் கருத்திற் கொண்டு சபையால் தீர்மானிக்கப்பட்ட வட்டியுடன் சேர்த்துப் பெறுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) உயிர் பிழைத்திருக்கும் வாழ்க்கைத்துணை எவரும் இல்லாதவிடத்து –

(i) இருபத்தொரு வயதுக்குக் குறைந்த பிள்ளையொன்றிருப்பின், அத்தகைய பிள்ளை ; அல்லது

(ii) ஒன்றுக்குக் கூடுதலான இருபத்தொரு வயதுக்குக் குறைந்த பிள்ளைகள் இருக்குமிடத்து, அத்தகைய பிள்ளை ஒவ்வொன்றும்,

மேலே 2 (அ) (i) ஆம் என்னும் உட்பிரிவின்கீழ் வாழ்க்கைத் துணைக்கு செலுத்தப்படற்பாலதான மாதாந்த நலன்களைப் பெறுவதற்கு உரித்துடையதாதல் வேண்டும்.

(3) வாழ்க்கைத் துணையின் இறப்பின் மீது அல்லது மறுமணத்தின்மீது, மேலே உட்பிரிவு 2 (அ) (i) என்பதன்கீழ் அத்தகைய வாழ்க்கைத் துணைக்கு செலுத்தப்படற்பாலதான மாதாந்த நலன்களின் கொடுப்பனவு இல்லாதொழிதல் வேண்டும் என்பதுடன் விடயத்திற்கேற்ப காலஞ்சென்றவரின் இருபத்தொரு வயதுக்குக் குறைவான பிள்ளை அல்லது பிள்ளைகள் வாழ்க்கைத் துணையின் இறப்பிற்கு அல்லது மறுமணத்திற்கு முன்னதாக அத்தகைய வாழ்க்கைத் துணைக்கு செலுத்தப்படற்பாலனவான மாதாந்த நலன்களைப் பெறுவதற்கு உரித்துடையவர்களாதல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழ் ஊழியரின் பிள்ளைக்கு அல்லது பிள்ளைகளுக்குச் செலுத்தப்படற்பாலனவான மாதாந்த நலன்களின் கொடுப்பனவு அவர்களது திருமணத்தின் மீது அல்லது அவர்கள் அவர்களது இருபத்தொரு வயதை அடைவதன் மீது, இவற்றுள் எது முன்னரான நிகழ்கின்றதோ அப்போது இல்லாதொழிதல் வேண்டும்.

ஆயின், பிள்ளை அல்லது பிள்ளைகள் நிரந்தர ஊனமுற்றவர்களாக முறையாக அமைத்துருவாக்கப்பட்ட மருத்துவச் சபையொன்றினால் அத்தாட்சிப்படுத்தப்படுமிடத்து, அத்தகைய பிள்ளைக்கு அல்லது அத்தகைய எவையேனும் பிள்ளைகளுக்குச் செலுத்தப்படற்பாலனவான நலன்களின் கொடுப்பனவு விடயத்திற்கேற்ப அத்தகைய பிள்ளையின் அல்லது பிள்ளைகளின் இறப்பின் மீது மட்டுமே இல்லாதொழிதல் வேண்டும்.

(5) மாதாந்த நலன்களைப் பெறத்தொடங்கியுள்ள உதவுதொகை செலுத்துநர் ஒருவர் அவர் எண்பது வயதை அடையுமுன்னர் உயிர் பிழைத்திருக்கும் வாழ்க்கைத்துணை அல்லது இருபத்தொரு வயதுக்குக் குறைந்த பிள்ளைகளின்றி இறக்குமிடத்து, அத்தகைய உதவுதொகை செலுத்துநரால் செலுத்தப்பட்ட உதவுதொகைகளின் மொத்தத் தொகையிலிருந்து செலுத்தப்படாது எஞ்சியுள்ள தொகை, சபையால் தீர்மானிக்கப்பட்டவாறு அதன்மீதான வட்டியுடன் சேர்த்து இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய விகிதாசாரத்திலும் அத்தகைய முந்துரிமை வரிசைக் கிரமத்திலும் அவரது நெருங்கிய இரத்த உறவினர்களுக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(6) உதவுதொகை செலுத்துநர் ஒருவர் நலனோம்பல் செயற்திட்டத்தின்கீழ் நலன்களைப் பெறுவதற்கு உரித்துடையவராவதற்கு முன்னர் இறக்கும் பட்சத்தில் அத்தகைய உதவுதொகை செலுத்துநரால் அவரது இறப்பின் திகதி வரை செலுத்தப்பட்ட உதவு தொகைகளின் மொத்தத் தொகை இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்டவாறான அதே விகிதாசாரத்திலும் அதே முந்துரிமை வரிசைக் கிரமப்படியும் அவரது நெருங்கிய இரத்த உறவினர்களுக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

உதவு தொகைகள் மீதான தள்ளுபடி.

7. ஊடக ஆளணியினர் நலனோம்பல் செயற்திட்டத்தில் இணைவதைத் தூண்டும் நோக்கத்துடன் அமைச்சர், நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருடனான ஆலோசனையுடன் உதவுதொகை செலுத்துநர்களால் செலுத்தப்படவேண்டிய உதவுதொகைகள் மீது விடயத்திற்கேற்ப தள்ளுபடியொன்றாக அல்லது அனுமதிக்கப்படக்கூடிய சதவீதமொன்றை ஒழுங்கு விதியால் விதித்துரைக்கலாம்.

பாகம் II

நலனோம்பல் செயற்திட்டத்தை முகாமைசெய்தல்

சமூகப் பாதுகாப்புச் சபையானது நலனோம்பல் செயற் திட்டத்தைச் செயற்படுத்துதலும் கட்டுப்படுத்துதலும்.

8. (இதனகத்துப்பின்னர் சபை எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1996 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, சமூகப் பாதுகாப்புச் சபைச் சட்டத்தின்கீழ்த் தாபிக்கப்பட்ட சமூகப் பாதுகாப்புச் சபையானது, இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ்த் தாபிக்கப்பட்ட நலனோம்பல் செயற்திட்டத்தைச் செயற்படுத்துவதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் பொறுப்பானதாக இருத்தல் வேண்டும்.

சபையின் தத்துவங்கள் கடமைகள் மற்றும் பணிகள்.

9. (1) சபையானது, இச்சட்டத்தினால் அதற்கு அளிக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிக்கும் மற்றும் பணிகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காகப் பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(அ) நலனோம்பல் செயற்திட்டத்தை நிருவகித்தல், முகாமை செய்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் ;

(ஆ) நலனோம்பல் செயற்திட்டம் தொடர்பான தேவைப் படுத்தப்பட்ட புள்ளிவிபர மதிப்பீடு, நிதி மற்றும் செயற் பாட்டு அறிக்கைகளைப் பேணுதல் ;

(இ) சபையின் அபிப்பிராயப்படி அதன்பணிகளைச் சரியாக நிறைவேற்றுவதற்கும் அல்லது நலனோம்பல் செயற் திட்டத்தை நிருவகிப்பதற்கும் மற்றும் நடைமுறைப் படுத்துவதற்குமான அத்தகைய வேறு எல்லாக் கருமங் களையும் செய்தல்.

(2) நலனோம்பல் செயற்திட்டத்திற்கு உதவு தொகை செலுத்து நர்களைச் சேர்த்துக்கொள்ளுதல் தொடர்பிலும் அவசியமான தென அது கருதும் வேறு கருமங்கள் பற்றியும் 1987 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் (கூட்டிணைத்தல்) சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தின் விதப்புரைகளையும் அவ தானிப்புக்களையும் பெறுவது சபையின் கடமையாதல் வேண் டும்.

சபையானது, உதவுதொகை செலுத்துபவர் ஒவ்வொருவருக்கும் பூட்கையை வழங்குதல்.

10. சபையானது, ஆளெவரையும் நலனோம்பல் செயற்திட்டத் துக்கான உதவுதொகை செலுத்துபவர் ஒருவராகச் சேர்த்துக்கொள் ளப்படுவதன்மீது அவரால் செலுத்தப்படவேண்டிய உதவுதொகை கள், அத்தகைய பூட்கையின் நியதி நிபந்தனைகள் மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட பூட்கையின்கீழ் அவருக்கு உரித்தாக நலன்கள் என்பவனவற்றைக் குறிப்பிட்டு நலனோம்பல் செயற்திட்டப் பூட்கை யொன்றை அவருக்கு வழங்குதல் வேண்டும்.

பூட்கையை இழப்பிக்கச் செய்தல்.

11. (1) எத்தேதிக்கு முன்பு உதவுதொகைகள் உதவுதொகை செலுத்துபவர் ஒருவரால் செலுத்தப்படற்பாலதோ அத்தேதி நலனோம்பல் செயற்திட்டப் பூட்கையில் குறித்துரைக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய தேதியன்று அல்லது அதற்கு முன்னர் பத்து தொடர்ச்சியான தவணைப் பணங்களைச் செலுத்தத் தவறுகின்ற உதவுதொகை செலுத்துபவர் எவரும், அவருக்கு வழங்கப்பட்ட நலனோம்பல் செயற்திட்டப் பூட்கையின் கீழான நன்மைகளை இழத்தல் வேண்டும்.

(2) உதவுதொகை செலுத்துபவர் எவரும், அவருக்கு வழங்கப்பட்ட நலனோம்பல் செயற்திட்டப் பூட்கையின் கீழான நன்மைகளை இழந்திருக்குமிடத்து, சபையானது, அத்தகைய உதவுதொகை செலுத்துபவருக்கு, அப்பயனைக் கொண்ட அறிவித்தலொன்றை வழங்குதல் வேண்டும்.

(3) உதவுதொகை செலுத்துபவர் ஒருவர், அவரது நலனோம்பல் செயற்திட்ட பூட்கையை வலிதுடையதாக்குவதற்காகச் சபைக்கு மேன்முறையீடு செய்வதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், தவணைப்பணத்தைச் செலுத்தத் தவறியமைக்கான காரணங்கள் உதவுதொகை செலுத்துபவரின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டவை எனத் திருப்திப்பட்டால் சபையானது, அப்பூட்கையை வலிதுடையதாக்குதலும் வேண்டும்.

(4) சபையானது, நலனோம்பல் செயற்திட்டப் பூட்கையொன்றை வலிதுடையதாக்குவதற்குத் தீர்மானிக்குமிடத்து, நிலுவையாகவுள்ள தவணைப்பணக் கொடுப்பனவுகள் எத்தேதிக்கு முன்பு செலுத்தப்படுதல் வேண்டுமோ அத்தேதிபற்றி உதவுதொகை செலுத்துபவருக்கு அறிவித்தல் வேண்டும். அத்தகைய கொடுப்பனவின் தேதி அத்தகைய பூட்கை வலிதுடையதாக்கப்பட்ட தேதியாக இருத்தல் வேண்டும்.

(5) சபையின் தீர்மானத்தினால் இன்னலுறுகின்ற உதவுதொகை செலுத்துபவர் எவரும் அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு மேன்முறையீடு செய்யலாம் என்பதுடன், அதன்மீதான அவரது தீர்மானம் முற்றானதும் முடிபானதாதலும் வேண்டும்.

நலனானது சாட்டுதல் செய்யப்படுதலோ அல்லது விதிப்பனவுக்குட் படுத்தப் படுதலோ ஆகாது.

12. நலனோம்பல் செயற்திட்டத்தின் செலுத்தப்படற்பாலதான நலன் எதுவும் சாட்டுதல் செய்யப்படுதலோ அல்லது கைமாற்றப்படுதலோ ஆகாது என்பதுடன், அத்தகைய சாட்டுதல் அல்லது கைமாற்றம் ஒவ்வொன்றும் முற்றிலும் வெற்றும் வெறிதுமாதல் வேண்டும். அத்தகைய நலன் எதுவும், அத்தகைய நலனானது, எவ்வாளுக்குக் கொடுக்குமதியாகவுள்ளதோ அவ்வாளிடமிருந்து வருமதியான ஏதேனும் கடனுக்கெதிராக அல்லது கொடுப்பனவுக்கெதிராக நடுக்கட்டப்படுதலோ நிறைவேற்றுகைக்காக எடுக்கப்படுதலோ ஆகாது.

பாகம் III

ஊடக ஆளணியினருக்கான சமூகப் பாதுகாப்பு நலனோம்பல் நிதியத்தைத் தாபித்தல்

ஊடக ஆளணியினருக்கான சமூகப் பாதுகாப்பு நலனோம்பல் நிதியம்.

13. (1) (இதனகத்துப்பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படுகின்ற) ஊடக ஆளணியினருக்கான சமூகப் பாதுகாப்பு நலனோம்பல் நிதியம் எனவழைக்கப்படும் நிதியமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) நிதியத்தில் ஆரம்ப மூலதனம் நூறு மில்லியன் ரூபாவாதல் வேண்டும் என்பதுடன் அது திரட்டுநிதியத்திலிருந்து செலுத்தப்படுதலும் வேண்டும்.

(3) சபையானது, நிதியத்தை முகாமைசெய்வதற்கும், கட்டுப்படுத்துவதற்கும் அத்துடன் செயற்படுத்துவதற்கும் தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) நிதியத்திற்குள் பின்வருவன செலுத்தப்படுதல் வேண்டும் :-

(அ) நலனோம்பல் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கெனக் காலத்துக்குக்காலம் பாராளுமன்றத்தினால் வாக்களிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

(ஆ) உதவுதொகை செலுத்துபவர்களினால் நலனோம்பல் செயற்திட்டத்திற்கு உதவுதொகைகளாகச் செலுத்தப்பட்ட எல்லாப் பணத்தொகைகளும் ;

(இ) சபையின் முதலீடுகளிலிருந்து வட்டி அல்லது இலாபங்கள் என்றவாறாகச் சம்பாதிக்கப்பட்ட எல்லாப் பணத்தொகைகளும் ;

(ஈ) இச்சட்டத்தின்கீழ், அதனது தத்துவங்களைப் பிரயோகிக்கையிலும், கடமைகளைப் புரிகையிலும் மற்றும் பணிகளை நிறைவேற்றுகையிலும், நன்கொடைகள் என்ற வகையில் அல்லது வேறுவகையில் சபையினால் பெறப்பட்ட எல்லாப் பணத்தொகைகளும் ;

(உ) அன்பளிப்புகள், மானியங்கள் அல்லது நன்கொடை என்றவகையில் அல்லது எத்தன்மையதுமான ஏதேனும் மூலவளத்திலிருந்து நலனோம்பல் செயற்திட்டத்தினால் பெறப்பட்ட அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

(ஊ) ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்தால் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்தால் நிதியத்திற்கு உரித்தாக்கப்படக்கூடிய அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

(5) இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களைப் பிரயோகிக்கையிலும், கடமைகளைப் புரிகையிலும் மற்றும் பணிகளை நிறைவேற்றுகையிலும் சபையினால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தை ஈடுசெய்வதற்கு தேவைப்பட்ட எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

பணங்களை முதலீடு செய்தல்.

14. சபையினால் உடனடியாகத் தேவைப்படுத்தப்படாத நிதியத்திலுள்ள எல்லாப் பணங்களும் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரால் அதிகாரமளிக்கக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய பிணையங்களிலும் முதலீடு செய்யப்படலாம்.

கடனெடுக்கும் தத்துவங்கள்.

15. (1) அமைச்சரினால் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரினதும் ஒருப்பாட்டுடன் அல்லது அதனை ஒத்த ஒருப்பாட்டுடன் கொடுக்கப்பட்ட ஏதேனும் அதிகாரத்தின் நியதிகளுக்கிணங்க சபையின் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கும் மற்றும் நலனோம்பல் செயற்திட்டத்தை நிருவகிக்கவும் நடைமுறைப்படுத்தவும் சபைக்குத் தேவைப்படுகின்றவாறான அத்தகைய தொகைகளை மேலதிகப்பற்று என்றவகையாக அல்லது வேறுவகையாக சபையானது இரவல் வாங்கலாம் அல்லது கடனெடுக்கலாம் :

ஆயினும், இவ்வுட்பிரிவின்கீழ்ச் சபையினால் திரட்டப்பட்ட கடன்கள் தொடர்பில் நிலுவையிலுள்ள கூட்டுமொத்தத் தொகையானது நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தொகையை எந்நேரத்திலும் விஞ்சுதலாகாது.

(2) சபையானது நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் சம்மதத்துடன், பின்வரும் நோக்கங்களுள் எவற்றிற்காகவும் அல்லது எல்லாவற்றிற்காகவும் (1) ஆம் உட்பிரிவின்கீழ்க் கடன்கள் என்றவகையிலல்லாது வேறுவகையில் பணத்தைக் கடனாகப் பெறலாம் :-

(அ) சபையின் பயன்பாட்டுக்குத் தேவைப்படும் ஏதேனும் அசையும் அல்லது அசையாச் சொத்தை தேவைக்கெடுத்தல் அல்லது கொள்ளுதல் ;

(ஆ) முதலாம் உட்பிரிவின்கீழ் கடனாகப் பெறப்பட்ட ஏதேனும் பணத்தை மீளச் செலுத்துதல்.

16. (1) சபையின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும். சபையின் நிதியாண்டும் மற்றும் கணக்குகளின் கணக்காய்வும்.

(2) சபையானது அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும் பொறுப்புகளும் அத்துடன் சபையின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய சரியான கணக்குப் புத்தகங்களை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளின் கணக்காய்வு தொடர்பிலான அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் சபையின் கணக்குகளின் கணக்காய்வு தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.

17. இரண்டாயிரத்தாறாம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டு அரசிறைச் சட்டத்தின் 34 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (V) எனும் உட்பந்தியின் நோக்கங்களுக்காக, நிதியமானது இலங்கை அரசாங்கத்தினால் தாபிக்கப்பட்ட நிதியமொன்றாகக் கருதப்படல் வேண்டும். 2006 ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க, உண்ணாட்டு அரசிறைச் சட்டம் சபைக்கு ஏற்புடையதாதல்.

18. ஐயங்களைத் தவிர்க்கும்பொருட்டு, 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகள் சபைக்கு ஏற்புடையனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது. 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்கச் சட்டம் ஏற்புடையதாதல்.

பாகம் IV

பொது

ஒழுங்கு விதிகள்.

19. (1) இச்சட்டத்தால் விதித்துரைக்கப்படுதல் வேண்டுமெனக் குறிப்பிடப்பட்ட அல்லது தேவைப்படுத்தப்பட்ட எல்லா விடயங்கள் தொடர்பிலும் அல்லது இச்சட்டத்தால் எவ்விடயங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டதோ அவ் எல்லா விடயங்கள் தொடர்பிலும் பின்வருவன உட்பட, அமைச்சரானவர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் :—

(அ) நலனோம்பல் செயற்திட்டத்தை ஒழுங்குபடுத்துதல், நிருவகித்தல் மற்றும் முகாமை செய்தல் ;

(ஆ) உதவுதொகை செலுத்துநர்களால் செய்யப்படுகின்ற, உதவுதொகைகளின் கொடுப்பனவிலான தவணை தவறுகை, பூட்கையை ஒப்படைத்தல் மற்றும் உதவு தொகை செலுத்துநரொருவரின் தகைமை இழப்பு என்பவற்றை ஆளுகின்ற நிபந்தனைகள் ;

(இ) சபையினால் அலுவல் நடாத்தப்படுவதற்கான நடவடிக்கைமுறை ; அத்துடன்

(ஈ) பூட்கையை முடிவுறுத்தல் அல்லது இழக்கச் செய்தல்.

(2) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வசதியானளவு விரைவாக கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியில் அல்லது அதில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியில் நடைமுறைக்குவருதலும் வேண்டும்.

(3) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்பட்டதன் பின்னர் வசதியானளவு விரைவாக அங்கீகாரத்துக்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் கொண்டுவரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட

எதனதும் செல்லுபடியாந்தன்மைக்குப் பங்கமின்றி, அங்கீகாரம் மறுக்கப்பட்ட அத்தகைய தேதியிலிருந்து இல்லாதொழிந்ததாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) எத்தேதியில் ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு இல்லா தொழிந்ததாகக் கருதப்படுகின்றதோ அத்தேதி பற்றிய அறிவிப் பானது வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

இச்சட்டத்தின்கீழ் அல்லது சபையின் பணிப்புரைமீது எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கான பாதுகாப்பு.

20. (1) துடர்ச்சி அல்லது குற்றவழக்கு எதுவும் -

(அ) இச்சட்டத்தின்கீழ் சபையால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட ஏதேனும் செயலுக்காக சபைக்கு எதிராக ; அல்லது

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அல்லது சபையின் பணிப்புரையின்மீது சபையின் எவரேனும் உறுப்பினரால் அல்லது அலுவலரால் அல்லது முகவரால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட ஏதேனும் செயலுக்காக அவருக்கெதிராக

இருத்தலாகாது.

(2) ஏதேனும் நீதிமன்றத்துக்கு முன் சபையால் அல்லது சபைக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில், சபையினால் உறப்பட்ட ஏதேனும் செலவு நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஏதேனும் துடர்ச்சியில் சபைக்குச் செலுத்தப்பட்ட அல்லது சபையினால் மீட்டுப் பெறப்பட்ட ஏதேனும் செலவுத் தொகையானது அத்தகைய நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழ் அல்லது சபையின் பணிப்புரையின்மீது (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப் பட்டவாறான எவரேனும் அத்தகைய ஆளினால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்படுகின்ற ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின் முன்பு அவருக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்ற வழக்

கில், அவரால் உறப்பட்ட ஏதேனும் செலவானது, அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டது என நீதிமன்றம் தீர்ப்பளிக்கப்படுமிடத்து அத்தகைய வழக்கு நடவடிக்கைகளில் அத்தகைய செலவானது அவரால் மீட்டுப் பெறப்பட்டாலன்றி, நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.

21. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பொருள் கோடல்.

22. இச்சட்டத்தின் நோக்கத்திற்கு சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி,

"ஊடகவியலாளர்" என்பது ஊடகவியலாளர் ஒருவராக செய்தியையும் தகவலையும் சேகரித்தலிலும் தயாரித்தலிலும் பரப்புதலிலும் ஈடுபட்டுள்ளவரும் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகம் உட்பட ஏதேனும் தொடர்பாடல் ஊடகத்தினூடாக அத்தகைய செய்தி அல்லது தகவல் மீது குறிப்புரை வழங்குபவருமான ஆளொருவர் என்று பொருள்படும்.

அட்டவணை I (பிரிவு 6(5)

உயிர்பிழைத்திருக்கும் வாழ்க்கைத்துணை அல்லது 21 வயதுக்குக் குறைந்த சட்டமுறைப்படியான பிள்ளைகள் எவரும் இல்லாதவிடத்து, செலுத்தப்படாதெஞ்சியுள்ள உதவுதொகைகளின் மீதித்தொகை செலுத்தப்படற்பாலதான விகிதாசாரம் பின்வருவதாதல் வேண்டும் –

(அ) உயிர்பிழைத்திருக்கின்ற இருபத்தொரு வயதுக்கு மேற்பட்ட சட்டமுறைப்படியான பிள்ளைகளுக்கு சமபங்குகளில் ;

(ஆ) இருபத்தொரு வயதுக்கு மேற்பட்ட உயிர்பிழைத்திருக்கும் சட்டமுறைப்படியான பிள்ளைகள் எவரும் இல்லாவிடில் -

(i) உயிர்பிழைத்திருக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட பெற்றோர்கள் இருப்பின், உயிர்பிழைத்திருக்கும் பெற்றோர்களுக்கு சமவிகிதாசாரங்களில் ;

(ii) உயிர்பிழைத்திருக்கும் பெற்றோர் ஒருவர் மாத்திரமிருப்பின், அத்தொகை முழுமையாக அப்பெற்றோருக்குச் செலுத்தப்பட வேண்டும் ;

(iii) பெற்றோர்கள் இல்லாதவிடத்து உயிர்பிழைத்திருக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட சகோதரர்களும் சகோதரிகளும் இருப்பின் உயிர்பிழைத்திருக்கும் சகோதரர்களுக்கும் சகோதரிகளுக்கும் சமவிகிதாசாரங்களில் ;

(iv) உயிர்பிழைத்திருக்கும் ஒரு சகோதரர் அல்லது சகோதரி மாத்திரம் இருப்பின், விடயத்திற்கேற்ப அத்தொகை முழுமையாக அச்சகோதரனுக்கு அல்லது சகோதரிக்கு

அட்டவணை II (பிரிவு 6(6)

உதவுதொகை செலுத்துநரால் செலுத்தப்பட்ட மொத்த உதவுதொகைகளும் 6 ஆம் பிரிவின் (8) ஆம் உட்பிரிவின்கீழ் செலுத்தப்படற்பாலதான விகிதாசாரமும் முன்னுரிமையின் வரிசைக்கிரமமும் பின்வருமாறாதல் வேண்டும் :

(அ) உயிர்பிழைத்திருக்கும் வாழ்க்கைத்துணையும் சட்டபூர்வமான பிள்ளைகளும் இருப்பின் ;

(i) உயிர்பிழைத்திருக்கும் வாழ்க்கைத்துணைக்கு ஐம்பது சதவீதம்; அத்துடன்

(ii) மிகுதி ஐம்பது சதவீதம் காலஞ்சென்ற உதவுதொகை செலுத்துநரின் உயிர்பிழைத்திருக்கும் சட்டமுறைப்படியான பிள்ளைகளால் சமபங்குகளாகப் பகிர்ந்துகொள்ளப்படுதல் வேண்டும் ;

(ஆ) உயிர்பிழைத்திருக்கும் வாழ்க்கைத்துணை இல்லாவிடில் அத்தொகை முழுமையாகவும் சமவிகிதாசாரங்களிலும் காலஞ்சென்றவரின் உயிர்பிழைத்திருக்கும் பிள்ளைகளால் பகிர்ந்துகொள்ளப்படுதல் வேண்டும் ;

(இ) உயிர்பிழைத்திருக்கும் வாழ்க்கைத்துணை அல்லது உயிர்பிழைத்திருக்கும் சட்டமுறைப்படியான பிள்ளைகள் எவரும் இல்லையெனில் ;

(i) உயிர்பிழைத்திருக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட பெற்றோர்கள் இருப்பின், உயிர்பிழைத்திருக்கும் பெற்றோர்களுக்கு சமவிகிதாசாரங்களில் செலுத்தப்படுதல் வேண்டும் ;

(ii) உயிர்பிழைத்திருக்கும் பெற்றோர் ஒருவர் மாத்திரம் இருப்பின், அத்தொகை முழுமையாக அப்பெற்றோருக்குச் செலுத்தப்படுதல் வேண்டும் ;

(iii) உயிர்பிழைத்திருக்கும் பெற்றோர் எவரும் இல்லையெனில் உயிர்பிழைத்திருக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட சகோதரர்கள் அல்லது சகோதரிகள் இருப்பின், உயிர்பிழைத்திருக்கும் சகோதரர்களுக்கும் சகோதரிகளுக்கும் சமவிகிதாசாரங்களில் செலுத்தப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(iv) உயிர்பிழைத்திருக்கும் ஒரு சகோதரன் அல்லது சகோதரி மாத்திரம் இருப்பின், அத்தொகை முழுமையாக அச்சகோதரனுக்கு அல்லது சகோதரிக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்